## November 20, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஜப்பான் நாடாளுமன்றத்தில் நவ. 7-ஆம் தேதி பேசிய தகாய்ச்சி, தைவானை சீனா தாக்கினால் அது ஜப்பானின் இருப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும்; அதனால் தைவானுடன் கூட்டு சேர்ந்து தற்காத்துக் கொள்வதற்கான உரிமையை ஜப்பான் பயன்படுத்தலாம் என்று கூறியிருந்தார். இதற்கு, தைவானை தங்களின் பிரிக்கமுடியாத பகுதியாகக் கருதும் சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.
    i. தைவான் குறித்து ஜப்பான் பிரதமர் சானே தகாய்ச்சி வெளியிட்ட கருத்துகளை உடனடியாக திரும்பப் பெறாவிட்டால் கடுமையான பதிலடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சீனா கடும் எச்சரிக்கை விடுத்தது.
    ii. இந்த விவகாரம், இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.
2. இந்தோனேசியாவின் அதிக மக்கள் தொகை கொண்ட ஜாவா தீவின் செமெரு எரிமலையில் புதன்கிழமை (நவ.19) பலமுறை சீற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கான அபாய எச்சரிக்கையை அதிகாரிகள் உச்சநிலைக்கு உயர்த்தினர். இது குறித்து இந்தோனேசிய புவியியல் ஆய்வு வெளியிட்ட அமைப்பு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:
    i. கிழக்கு ஜாவா மாகாணத்தில் உள்ள செமெரு எரிமலையில் புதன்கிழமை (நவ.19) நண்பகல் முதல் மாலை வரை பலமுறை சீற்றம் ஏற்பட்டது. அப்போது சூடான சாம்பல் புகையைக் கக்கிய அந்த எரிமலையில் இருந்து, பாறைகள், எரிமலைக் குழம்பு உள்ளிட்டவை 7 கி.மீ. தொலைவு வரை பரவின. சூடான சாம்பல் புகை 2 கி.மீ. உயரத்துக்கு எழுந்தது. இதில் பல கிராமங்கள் சாம்பலால் மூடப்பட்டன. இதனால் இரு முறை உயர்த்தப்பட்ட எரிமலைச் சீற்ற அபாயம் மூன்றாவது நிலையில் இருந்து உச்ச நிலைக்கு உயர்த்தப்படுகிறது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
    ii. இந்த எரிமலைச் சீற்றத்தின் விளைவாக உயிரிழப்புகள் ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லை.
    iii. மகாமேரு என்றும் அழைக்கப்படும் செமெரு எரிமலையில் கடந்த 200 ஆண்டுகளில் பலமுறை சீற்றம் ஏற்பட்டுள்ளன. இருந்தாலும், இந்தோனேசியாவின் 129 எரிமலைகளில் பலவற்றைப் போலவே, இந்த எரிமலையின் சரிவுகளிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வசித்து வருகின்றனர்.
    iv. 27 கோடிக்கும் மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்ட இந்தோனேசியா, ஒன்று உராயும், 'பசிபிக் புவித் தகடுகள் ஒன்றுடன் நெருப்பு வளையம்' என்று அழைக்கப்படும் பகுதியில் அமைந்துள்ளதால் அங்கு நிலநடுக்கங்கள், எரிமலைச் சீற்றங்கள் அடிக்கடி ஏற்படு கின்றன.
3. தேசிய தீர்ப்பாயங்கள் ஆணையத்தை 4 மாதங்களில் அமைக்க மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் புதன்கிழமை உத்தரவிட்டது.
    i. 2021-ஆம் ஆண்டின் தீர்ப்பாயங்கள் திருத்தச் சட்டத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் மீதான விசாரணை நிறைவடைந்து கடந்த நவ.11-ஆம் தேதி தீர்ப்பை உச்சநீதி மன்றம் ஒத்திவைத்தது.
    ii. இந்நிலையில், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதி கே.வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு புதன்கிழமை அளித்த தீர்ப்பில், தேக்கமடைந்துள்ள வழக்குகளைக் கையாள வேண்டியது நீதித்

துறையின் பொறுப்பு மட்டும் அல்ல. அரசின் பிற பிரிவுகளும் அந்தப் பொறுப்பைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

iii. இந்நிலையில், 2021-ஆம் ஆண்டின் தீர்ப்பாயங்கள் திருத்தச் சட்டத்தின் சில பிரிவுகளை சிறிய மாற்றங்களுடன் மத்திய அரசு மீண்டும் அறிமுகம் செய்துள்ளது. அந்தப் பிரிவுகள் நீதித் துறையின் சுதந்திரம், அதிகாரப் பகிர்வு ஆகிய வற்றை பாழ்படுத்துகின்றன. இது நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பின்பற்றாமலும், குறைகளை நிவர்த்தி செய்யாமலும் சட்டம் இயற்றுவதற்கு நிகராகும். எனவே, ஒரு தீர்ப்பாயத்தின் தலைவர் அல்லது உறுப்பினராக ஒருவரை நியமிக்க அவரின் வயது குறைந்தபட்சம் 50-ஆக இருக்க வேண்டும், தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 4 ஆண்டுகளாக இருக்க வேண்டும் உள்ளிட்ட பிரிவுகள் ரத்து செய்யப்படுகின்றன.

iv. மேலும், தேசிய தீர்ப்பாயங்கள் ஆணையம் அமைக்க மத்திய அரசுக்கு 4 மாதங்கள் அவகாசம் அளிக்கப்படுகிறது. நாடு முழுவதும் பல்வேறு தீர்ப்பாயங்களின் செயல்பாடு, நிர்வாகம், நியமனங்கள் ஆகியவை ஒரே மாதிரியாகவும், சுதந்திரமாகவும், வெளிப்படைத்தன்மையோடும் இருப்பதை உறுதி செய்வதற்கு அந்த ஆணையத்தை உருவாக்க வேண்டும்' என்று உத்தர விட்டனர்.

4. ஜப்பானில் நடைபெறும் டெஃப்லிம்பிக்ஸ் போட்டியில் துப்பாக்கி சுடுதலில் இந்தியாவின் பதக்க வேட்டை தொடர்கிறது.

   i. 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவு இறுதிச்சுற்றில், இந்தியாவின் அபிநவ் தேஷ்வால், பிரஞ்சலி பிரசாந்த் துமல் கூட்டணி 16-6 என்ற புள்ளிகள் கணக்கில் சீன தைபேவின் யா ஜு காவ், மிங் ஜுய் சு இணையை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது.

5. சுவிட்ஸர்லாந்து டென்னிஸ் நட்சத்திரம் ரோஜர் ஃபெடரர், 'இன்டர்நேஷனல் டென்னிஸ் ஹால் ஆஃப் ஃபேம்-இல் சேர்க்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டார்.

   i. அமெரிக்காவின் ரோட் ஐலேண்டில் உள்ள இந்த அமைப்பானது, டென்னிஸ் விளையாட்டுக்கு சிறப்பாக பங்களித்தோரை கௌரவித்து வருகிறது. அந்த வகையில், 2026-ஆம் ஆண்டுக்கான பட்டியலுக்கு ஃபெடரர் தேர்வு செய்யப்பட்டு, கௌரவிக்கப்பட்டுள்ளார்.

   ii. அடுத்த ஆண்டு ஆகஸ்ட்டில் நடைபெறும் நிகழ்ச்சியில் அவர், இந்த ஹால் ஆஃப்

   iii. ஃபேம் அருங்காட்சியகத்தில் - அதிகாரபூர்வமாக இணைக்கப்படுவார்.2022-இல் டென்னிஸிலிருந்து ஓய்வுபெற்ற ஃபெடரர், அந்த விளையாட்டின் வரலாற்றில் ஜிம்மி கானர்ஸுக்கு (106) பிறகு அதிக டூர் நிலை பட்டங்கள் (103) வென்றவராக இருக்கிறார்.

   iv. 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்ற முதல் வீரரான ஃபெடரர், 28 மாஸ்டர்ஸ் பட்டங்களும் வென்றிருக்கிறார். இதுதவிர, தனது உச்சஃபார்மில் இருந்தபோது, ஏடிபி தரவரிசையில் உலகின் நம்பர் 1 வீரராக தொடர்ந்து 237 வாரங்களுக்கு (2004 பிப்ரவரி - 2008 ஆகஸ்ட்) நீடித்த சாதனையும் அவர் வசம் உள்ளது.

6. ரஷியாவில் 2 புதிய இந்திய துணைத் தூதரகங்களை வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் புதன்கிழமை (நவ. 19) திறந்துவைத்தார்.

   i. இந்தத் தூதரகங்கள் மூலம் இருதரப்பு வர்த்தகம், சுற்றுலா, பொருளாதாரம், தொழில்நுட்பம், கல்வி, கலாசார உறவுகள் மேலும் வலுப்படும் என்று அவர் தெரிவித்தார்.

   ii. ரஷியாவில் இந்திய தூதரக்கட்டமைப்பை விரிவுபடுத்தும் நோக்கில், யேகேதரின்பர்க் மற்றும் கஸான் நகரங்களில் புதிய இந்திய துணைத்தூதரகங்கள்

திறக்கப்பட்டுள்ளன.

iii. இந்நிகழ்ச்சியில் ரஷிய வெளியுறவுத் துறை இணையமைச்சர் ஆண்ட்ரே ருடென்கோ, ரஷியாவுக்கான இந்தியத் தூதர் வினய் குமார் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

iv. மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக ரஷியாவுக்கு கடந்த திங்கள்கிழமை வந்த எஸ்.ஜெய்சங்கர், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் செவ்வாய்க்கிழமை பங்கேற்றார். ரஷிய அதிபர் விளாதிமீர் புதினையும் அவர் சந்தித்துப் பேசினார்.

v. தில்லியில் நிகழாண்டு இறுதியில் நடைபெறும் இந்திய-ரஷிய உச்சி மாநாட்டையொட்டி, அதிபர் புதின் இந்தியாவுக்கு வரவுள்ள நிலையில், இந்தச் சந்திப்பு முக்கியத்துவம்பெற்றது.

vi. இரு துணைத் தூதரகங்கள் திறப்பு: இந்நிலையில், யேகேதரின்பர்க், கஸான் ஆகிய நகரங்களில் புதிய இந்திய துணைத் தூதரகங்களின் திறப்பைக் குறிக்கும் நிகழ்ச்சி, மாஸ்கோவில் உள்ள இந்தியத் தூதரகத்தில் புதன்கிழமை (நவ. 19) நடைபெற்றது.

vii. யேகேதரின்பர்க் நகரம், ரஷியாவின் மூன்றாவது தலைநகர் என்ற சிறப்புக்குரியது. தொழில்முக்கியத்துவம் வாய்ந்த நகரம் என்பதுடன் சைபீரியாவுக்கான நுழைவாயிலாகும். இந்தத் துணைத் தூதரகம், இரு தரப்பு தொழில் துறையினர் இடையிலான வர்த்தகம், அறிவியல், தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்தும்.

viii. பன்முக கலாசாரங்கள்-சமூகங்களின் மையமாக விளங்கும் கஸான் நகரம், ரஷியாவுக்கும் ஆசியாவின் பிற பகுதிகளுக்கும் இடையே பாலமாக உள்ளது. அங்கு திறக்கப்பட்டுள்ள துணைத் தூதரகம், இரு தரப்பு மக்களின் கலாசாரத் தொடர்புகள் வலுப்பட உதவும்.

ix. கச்சா எண்ணெய் உற்பத்தி-சுத்தி கரிப்பு, உரங்கள், வாகனங்கள், பாதுகாப்பு உற்பத்தி, மருந்துப் பொருள்கள், மின்சார உபகரணங்களின் உற்பத்திக்கு கஸான் நகரம் பெரிதும் அறியப்படுகிறது.

x. இரு துணைத் தூதரகங்களும் நல்லுறவை இந்திய-ரஷியா மேலும் வலுப்படுத்தி, புதிய பரிமாணத்தை வழங்கும்; 2030-க்குள் இரு தரப்பு வர்த்தகத்தை 10,000 கோடி டாலராக அதிகரிக்கும் கூட்டு முயற்சிகளுக்கு வலுவாகப் பங்களிக்கும்.

xi. கஸான் துணைத் தூதரக வரம்புக்குள் 7,000 இந்தியர்களும், யேகேதரின்பர்க் துணைத் தூதரக வரம்புக்குள் 3,000 இந்தியர்களும் வசிக் கின்றனர்.

xii. மாஸ்கோவில் முன்னதாக, உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய எஸ்.ஜெய்சங்கர், இந்திய சமூகத்தி னரையும் சந்தித்துப் பேசினார்.

xiii. ரஷிய தலைநகர் மாஸ்கோவில் இந்திய தூதரகமும், செயின்ட் பீட்டர்ஸ்பர்க், விளாடிவோஸ்டாக் நகரங்களில் துணைத் தூதரகங்களும் ஏற்கெனவே செயல்படு கின்றன.

7. கொழும்பு பாதுகாப்பு மாநாடு (சிஎஸ்சி) அமைப்பின் உறுப்பு நாடுகளின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்கள் மாநாடு தில்லியில் நடைபெறுகிறது.

   i. தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் சிஎஸ்சி அமைப்பின் உறுப்பு நாடுகளான மாலத்தீவு, மோரீஷஸ், இலங்கை, வங்கதேச நாடுகளின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்கள் பங்கேற்க உள்ளனர்.

   ii. மாநாட்டில் பங்கேற்க செஷல்ஸுக்கு பார்வையாளர் நாடாகவும், மலேசியாவுக்கு விருந்தினர் நாடாகவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

   iii. இது குறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'சிஎஸ்சி அமைப்பின் 7-ஆவது மாநாடு தில்லியில் நடைபெற உள்ளது. இதில்,

கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாதம், நாடு கடந்த திட்டமிட்ட குற்றங்கள், இணையப் பாதுகாப்பு, முக்கிய உள்கட்டமைப்புகள் பாதுகாப்பு, மனிதாபிமான உதவிகள், பேரிடர் நிவாரணம் உள்ளிட்டவை குறித்து விவாதிகக்ப்படஉள்ளது. அதோடு, இந்த அமைப்பின் 2026- ஆம் ஆண்டு செயல் திட்ட உருவாக்கம் குறித்தும் விவாதிக்கப்படும்' என்று தெரிவிக்கப்பட்டது.

iv. இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் உறுப்பு நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துக்காக இந்த சிஎஸ்சி அமைப்பு உருவாக்கப் பட்டது.

v. இந்த அமைப்பின் 6-ஆவது தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்கள் மாநாடு 2023-ஆம் ஆண்டு டிசம்பரில் மோரீஷஸில் நடைபெற்றது. சிஎஸ்சி அமைப்பின் நிறுவன ஆவணங்களில் கையொப்பமிட கடந்த 2024-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இலங்கையில் உறுப்பு நாடுகள் மீண்டும் கூடின.

vi. அதுபோல, சிஎஸ்சி அமைப்பின் உறுப்பு நாடுகளின் துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்கள் மாநாடும் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. கடைசியாக இந்த மாநாடு கடந்த 2024-ஆம் ஆண்டு ஜூலையில் காணொலி வழியில் நடைபெற்றது.

8. ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் நூற்றாண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு, ரூ.100 நினைவு நாணயம் மற்றும் அவரது வாழ்க்கை-போதனை- மரபை நினைவுகூரும் சிறப்பு அஞ்சல் தலைகளையும் பிரதமர் மோடி வெளியிட்டார். ஸ்ரீசத்யசாய்பாபா கோயில் மற்றும் மகா சமாதியிலும் அவர் வழிபாடு மேற்கொண்டார்.

9. உறுப்புதானம் மற்றும் தேவைப்படுபவர்களுக்கு அந்த உறுப்புகளை அளிப்பதில் வெளிப்படைத்தன்மை மற்றும் முறையான நடைமுறையை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து மாநிலங்களுடன் ஆலோசனை மேற்கொண்டுதேசியக்கொள்கை மற்றும் சீரான விதிகளை வகுக்க வேண்டும்' என்று மத்திய அரசை உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது.

i. மேலும், 'மத்திய அரசு வகுத்துள்ள 'மனித உடல் உறுப்புகள் மற்றும் திசுக்கள் மாற்று அறுவை சிகிச்சை விதிகள் 2014-ஐ தமிழகம், கர்நாடகம், மணிப்பூர் உள்ளிட்ட மாநிலங்கள் உடனடியாக ஏற்று நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும்' என்றும் உச்சநீதி மன்றம் அறிவுறுத்தியது. உறுப்பு தானம் மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை முறைப்படுத்தும் வகையில் மத்திய அரசு கடந்த 2014-ஆம் ஆண்டு வகுத்த சட்ட விதிகளை தமிழகம், கர்நாடகம் உள்ளிட்ட பல மாநிலங்கள் ஏற்று நடைமுறைப்படுத்தவில்லை. இந்த மாநிலங்கள் இந்த விவகாரத்தில் தங்களின் சொந்த சட்டங்களைப் பின்பற்றுகின்றன. இதனால், இதில் சீரற்ற நிலைமை நிலவுகிறது என்று புகார் தெரிவித்து 'உறுப்பு மாற்று சிகிச்சைக்கான இந்திய சமூகம்' என்ற அமைப்பு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

ii. இந்த மனு கடந்த ஏப்ரல் 21- ஆம் தேதி விசாரணைக்கு வந்த போது, 'அனைத்து மாநில தலைமைச் செயலர்கள் மற்றும் சுகாதாரச் செயலர்கள் கூட்டத்தைக் கூட்டி, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டத்தின் கீழ் 2014- ஆம் ஆண்டில் மத்திய அரசு வகுத்த விதிகளை முறையாக நடைமுறைப்படுத்துவது குறித்து மத்திய அரசு அறிவுறுத்தல் வழங்க வேண்டும் என்று உச்சநீதி மன்றம் அறிவுறுத்தியது.

iii. இந்த மனு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதி கே.வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் கே.ப ரமேஸ்வர், 'உறுப்பு தானமளிப்பவர்கள் மற்றும் அதைப் பெறுபவர்கள் தொடர்பான தேசிய

அளவிலான ஒருங்கிணைந்த தரவுகள் இதுவரை இல்லாதது மிகவும் ஆபத்தானது. இது, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நடைமுறைகளையும் தாமதப்படுத்தும். மேலும், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் சமூகப் பிரிவு மற்றும் பாலினம் அடிப்படையில் பாகுபாடு தொடர்வதால், இன்றைக்கும் குறிப்பிட்ட பிரிவு மக்கள் மட்டுமே அணுகக்கூடியதாக உள்ளது. 90 சதவீத உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் தனியார் மருத்துவமனைகளில்தான் நடைபெறுகின்றன' என்றார். இதைக்கேட்ட நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

iv. மனித உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம் 1994- இல் கடந்த 2011-ஆம் ஆண்டு கொண்டுவந்த சட்டத் திருத்தத்தை ஏற்று நடைமுறைப்படுத்த ஆந்திர மாநிலத்தை மத்திய அரசு அறிவுறுத்த வேண்டும்.

v. இந்தச் சட்டத்தின் கீழ் மத்திய அரசு 2014-ஆம் ஆண்டு வகுத்த விதிகளை, அதன் முக்கியத்துவம் கருதி தமிழகம், கர்நாடகம், மணிப்பூர் உள்ளிட்ட மாநிலங்கள் விரைந்து நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும்.

vi. தானம் பெறும் உடல் உறுப்புகள் தேவைப்படும் தகுதியுள்ள நபர்களுக்கு ஒதுக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் முறையான ஒதுக்கீடு அளவுகோலுடன் தேசியக் கொள்கையை மத்திய அரசு வகுக்க வேண்டும்.

vii. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் பாலினம் மற்றும் சமூகப் பிரிவு அடிப்படையிலான பாகுபாட்டைக் களையும் வகையில், வகுக்கப்பட நாடு முழுமைக்குமான சீரான நடைமுறைகள் வேண்டும்.

viii. மாநில உடல் உறுப்புகள் மற்றும் திசு மாற்று அமைப்பு (எஸ்ஓடிஓ) இல்லாத மணிப்பூர், நாகாலாந்து, அந்தமான்-நிகோபார் தீவுகள், லட்சத் தீவுகள் உள்ளிட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உரிய ஆலோசனைகளை மேற்கொண்டு தேசிய உடல் உறுப்பு மாற்று சிகிச்சைத் திட்டத்தின் கீழ் அந்த அமைப்புகளை உருவாக்க வேண்டும். வாழும்போதே உறுப்பு தானமளிப்பவர்கள் தொடர்ந்து வணிக ரீதியில் சுரண்டலுக்கு உள்ளாவதைத் தடுக்கும் வகையிலும், அவர்களின் உடல் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் வழிகாட்டுதல்களை மத்திய அரசு வகுக்க வேண்டும்.

ix. மூளைச்சாவு அடைந்த நபரின் உறுப்புகள் தானமளிக்கப்படும் போது, அதுகுறித்த விவரம் மற்றும் மூளைச்சாவு அடைந்தவரின் உறுப்பை தானமளிக்கும் வாய்ப்பு, அவரின் குடும்பத்துக்கு அளிக்கப்பட்டதா என்பது குறித்த விவரங்களைக் குறிப்பிடும் வகையில் தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அறுவை சிகிச்சை அமைப்புடன் (என்ஓடிடிஓ) ஆலோசனை மேற்கொண்டு, பிறப்பு-இறப்பு பதிவு படிவங்களான படிவம்-4 மற்றும் 4ஏ-யில் தேவையான திருத்தங்களை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.